1984 பிப்ரவரி 15]

ரெட்டணை ஊராட்சியிலிருந்து நாரேரிக்குப்பம் கிராமத்தைப் பிரித்து தனி ஊராட்சியாக்கும் திட்டம்.

*27—வினா எண். 18783—திரு கே. எம். தங்கமணி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திண்டிவனம் தொகுதி மயிலம் ஒன்றியம் ரெட்டணை ஊராட்சியிலிருந்து நாரேரிக்குப்பம் கிராமத்தைப் பிரித்து தனி ஊராட்சியாக மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் தனி ஊராட்சியாக மாற்றியமைக்கப் படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) மற்றும் (ஆ): செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளது.

திரு கே. எம். தங்கமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையில் ஊராட்சித் தேர்தல்கள் எல்லாம் நடைபெறும் என்று மேதகு கவர்னர் அவர்கள் உரையில் அறிவிக்கப் பட்டு விட்டது. அதற்குள்ளாக ஊராட்சிகளைத் தனியாக பிரிக்கும் திட்டம் செயற்படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சித் தேர்தல்களை வருகின்ற ஏப்ரல் மாதத்தில் நாம் நடத்துவதாக ஏற்கனவே மேதகு ஆளுநர் அவர்கள் தங்களுடைய உரையில் தொனித்து இருக்கிறார்கள். ஆகவே தேர்தல்கள் நடத்துவதற்கு முன்பாக இப்படிப்பட்ட சீர்திருத்தங்களை நாம் செய்ய முடியாது. அதனால்தான் பரிசீலனையில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டு இருக்கிறது.

மாரனேரி கிராமத்தில் சமுதாயக் கிணறு வெட்டும் திட்டம்.

*28—வினா எண். 19159—திரு வி. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகாசி ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் மாரனேரி கிராமத்தில் சமுதாயக் கிணறு வெட்டப்பட்டு வேலை பூர்த்தியாக வில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) உடன் அந்த வேலையை முடிக்க அரசு உத்தரவிடுமா?

(இ) D.P.A.P. திட்டத்தின் மூலம் வேலையை முடிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) மற்றும் (இ): இந்தச் சமுதாயக் கிணற்றை சிவகாசி ஒன்றியம் மாரனேரி கிராமத்தில் அமைக்க முடிவு செய்யப்பட்டு அதற்காக ரூ. 50,000 மதிப்பீடும் தயார் செய்யப்பட்டது. இந்த மதிப்பீட்டிற்கு ஒப்பந்தக்காரர்கள் முன்வராததால் கூடுதல் மதிப்பீட்டிற்கு ஒப்படைக்கப்பட்டது.